
**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only

# ALL SAINTS' DAY



Pray for Us

**NOVEMBER 1ST**

Printed Matter

# அனைத்து புனிதர்கள் தினம்

நவம்பர் 01

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

**Diocese of Marthandam**

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



# கூதோஸ் ஈத்தோ ஞாயிறு

நவம்பர் 02

மலர் 21 நவம்பர் 2025 இதழ் 11

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 09.11.2025 to 14.11.2025 | Sunday to Friday | | Annual Retreat to Priests of Dindugal Diocese | Madurai |
| 15.11.2025 | Saturday | | Thalirgal Ulagam - MIDS | Kazhuvanthittai |
| 16.11.2025 | Sunday | 8.30 am<br>2.00 pm | Feast Mass<br>School Day | Nadaikkavu<br>Kirathoor |
| 21.11.2025 | Friday | 4.00 pm | School Day | Palavilai |
| 23.11.2025 | Sunday | 8.30 am<br>4.00 pm | Feast Mass<br>Christ the King Rally | Cathedral Marthandam<br>Adaikkakuzhi |
| 25.11.2025 | Tuesday | 10.00 pm | Appraisal of Diocesan Social Apostolate | MIDS Kazhuvanthittai |
| 29.11.2025 | Saturday | 3.30 pm<br>6.00 pm | School Day<br>Feast Mass | Mariagiri<br>Vimalapuram |
| 30.11.2025 | Sunday | 7.00 am<br>4.00 pm<br>6.00 pm | Memorial Mass<br>UCC Meet<br>Feast Mass | Puthoor<br>Vavarai<br>Mecode |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 நவம்பர் 2025 இதழ். 11

***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*





மலர். 22 அக்டோபர் 2025 இதழ். 10

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church Bulletin of the Diocese of Marthandam




**முக்கியமான நாட்கள்**

நவம்பர் 2025

மலர்.22 நவம்பர் 2025 இதழ்.11

| | |
|---|---|
| 01 | அனைத்து புனிதர்கள் தினம் |
| 01 | தேசிய ஆசிரியர் தினம் |
| 02 | அனைத்து ஆன்மாக்களின் தினம் |
| 05 | உலக சுனாமி விழிப்புணர்வு தினம் |
| 10 | சர்வதேச கணக்கியல் தினம் |
| 10 | அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் |
| 13 | உலக கருணை தினம் |
| 14 | குழந்தைகள் தினம |
| 16 | சர்வதேச சகிப்புத்தன்மை தினம் |
| 18 | தேசிய தொழில்முனைவோர் தினம் |
| 19 | சர்வதேச ஆண்கள் தினம் |
| 20 | உலக தத்துவ தினம் |
| 20 | உலகளாவிய குழந்தைகள் தினம் |
| 21 | உலக தொலைக்காட்சி தினம் |
| 26 | தேசிய பால் தினம் |
| 27 | நன்றி தெரிவிக்கும் நாள் |

## உள்ளடக்கம்


1. Circular 03
2. குருத்துவ பயிற்சியகம் 09
3. MIDS 10
4. Health for One Million (Hom) 13
5. கொமித்சியச் செய்திகள் 14
6. மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர் 15
7. தாபோர் தியான இல்லம் 16
8. MCA 17
9. திருமண ஆயத்தப்பயிற்சி 17
10. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 18
11. MCYM 19
12. மறைவட்ட செய்திகள் 20
13. ஆயரின் அக்டோபர் மாத நிகழ்வுகள் 21
14. இம்மாதம் நினைவு கூர 23
15. Bishop's Diary 24



*Printed by*

Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**உயர் பேராயர் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
காதோலிக்கா பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 3/2025

*தாமாய்த் தோன்றியவரும் ஆதிமுடிவற்றவரும், உள்ளியல்பில் சரிநிகர் ஆனவருமாய் இருக்கிற மூவோர் இறைவனுக்குப் புகழ்.*

### மறைத்தூதுப்பணி ஞாயிறு 2025

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

அகில உலக திருச்சபை 2025 அக்டோபர் 19-ம் நாள் மறைத்தூதுப் பணி ஞாயிறை கொண்டாடுகிறது. இத்தருணத்தில் நற்செய்தி அறிவிக்கும் திருச்சபையாகிய மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் நம்பிக்கையாளர் சமூகம் நற்செய்தி அறிவிக்கும் பணியில் ஒரு புது எழுச்சி காணட்டும். தொடக்கத் திருச்சபையின் உள்ளத்தையும் நற்செய்தியின் இதயத்தையும் எதிரொலிக்கச் செய்வதே நற்செய்திப்பணி. "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக்

கொடுங்கள்'' (மத் 28:19). ஆண்டவர் இயேசு விண்ணேற்றம் அடைவதற்கு முன் இச்சிறந்த ஆணையை திருச்சபைக்கு வழங்கினார். அன்பானவர்களே சொல்லிலும் செயலிலும் நற்செய்திக்கு சான்று பகர நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். எனவே நற்செய்தி அறிவித்தல் மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவையின் தலைசிறந்த கடமையாக அமைகிறது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கமும் தொடர்ந்து வழங்கப்பட்ட திருஅவையின் படிப்பினைகளும் திருச்சபை நற்செய்திப் பணிக்காகவே நிலைகொள்கிறது என்ற கருத்தை அழுத்தமாக எடுத்துச் சொல்கின்றன. இறைமக்கள் சமூகம் திருமுழுக்காலேயே நற்செய்தி அறிவிக்கும் சீடர்களாக மாறுகின்றனர் என்று தனது 'நற்செய்தியின் மகிழ்ச்சி' என்ற திருமடலில் திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டினார். நற்செய்தி அறிவித்தல் ஒரு சிலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு பணி அல்ல. இது திருச்சபையின் குறிப்பாக ஆயர்கள், குருக்கள், துறவிகள், நம்பிக்கையாளர்கள் ஆகியோரின் கூட்டுப்பொறுப்பாகும். சுருங்கக்கூறின் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு ஒவ்வொரு நம்பிக்கையாளரையும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக மாற அழைக்கிறது. ஆண்டவர் இயேசு அன்புடன் நம்மிடம் ஒப்படைத்த கடமையை உள்வாங்கி இறைவேண்டலின் நிலை கொண்ட ஒரு வாழ்வு வாழ்வதனால் இக்கடமையை நிறைவேற்ற முடியுமென திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு கற்பித்தார்.

திருத்தந்தை 14-ம் லியோ போரினாலும் வன்முறையாலும் அநீதியாலும் காயப்பட்ட ஒரு உலகத்தைக் குறித்து பேசுகிறார். இந்த உலகம் அன்பு, அமைதி, ஒப்புரவு ஆகியவற்றின் நற்செய்தியை அவசரமாகக் கேட்க வேண்டும். நாம் சந்திக்கும் சவால்களை



சமாளிப்பதற்கு புதிய பாதை தேவையென திருத்தந்தை அறிவுறுத்துகிறார். எனவே நற்செய்தியாளர்களுக்கும் நற்செய்திப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்களுக்கும் அறிவில் மட்டுமல்ல ஆன்மீகம் மற்றும் மனிதத்துவம் போன்றவற்றில் உருவாக்கம் தேவைப்படுகிறது. நற்செய்தி அறிவிக்க புறப்படுபவர்கள் தங்களை முதலில் நற்செய்தியால் புதிதாக்கம் செய்து கொள்ள வேண்டுமென்று திருத்தந்தை அழைப்புவிடுக்கிறார். மேலும் இத்திருப்பணியை திறம்படச் செய்ய மனமாற்றமும் ஆத்ம சோதனையும் அடிக்கடி மேற்கொண்டு கிறிஸ்து நம்மை பக்குவப்படுத்த நம்மையே விட்டுக் கொடுப்போம். அவ்வாறு கிறிஸ்துவின் மனநிலையில் நாம் செயல்பட்டால் நாம் அளிக்கும் சான்று ஆற்றல் மிக்கதாக இருக்கும்.

நாம் வாழுமிந்த சமூகம் துரிதமான மாற்றத்தை கண்டு கொண்டு இருக்கிறது. நம்பிக்கையின்மை, கலாச்சார மாற்றங்கள், உண்மையற்ற மதசார்பின்மை போன்றவை நற்செய்தி அறிவித்தலுக்கு புதிய சவால்கள் மட்டுமல்ல புதிய வாய்ப்புகளும் கூட. இத்தருணத்தில் மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் நற்செய்தி அறிவிக்கும் ஆர்வம் இன்னும் அதிகமாக வலுபெற்று வளர வேண்டும். கீழை சபைகளின் திருமரபில் வேரூன்றி நின்று பேரார்வத்துடன் நற்செய்தியை முழக்கமிட்டறிவித்து சான்று பகிர்ந்து தொண்டுகள் செய்து நற்செய்திப்பணி ஆர்வத்தை வெளிப்படுத்துவோம்.

நற்செய்திப்பணி குடும்பத்தில் தான் தொடங்கப்படுகிறது. தொடர்ந்து பிற குடும்பங்களையும் அயலாரையும் அது சென்றடைந்து பங்குகளின் எல்லைகளைக் கடந்து, பரந்து விரிந்த உலகில் கிறிஸ்துவை அறியாத மக்களிடம் அது கடந்து செல்கிறது என்பதை உறுதிப்படுத்துவோம். "ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது

நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்" (திரு பணி 1:8). நற்செய்திப்பணியில் குருக்களும், துறவியரும் மட்டுமல்ல பொதுநிலையினரும் இத்திருப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள கடமைப்பட்டுள்ளனர். நம்பிக்கையாளர்கள் திருமுழுக்கு வாயிலாக கிறிஸ்துவின் திருப்பணியில் பங்கு சேர்ந்து வாழ்வின் எல்லா துறைகளிலும் குறிப்பாக பணியிடங்கள், பள்ளிக்கூடங்கள், சமூகக் கூடுகை நடத்தும் இடங்கள், Digital தளங்கள் போன்றவற்றில் சாட்சிகளாக மாற அழைக்கப் பட்டிருக்கிறார்கள்.

நமது பங்குகள் என்பது வழிபடுகின்ற தோழமை குழுமம் மட்டுமல்ல, மாறாக அது ஒரு நற்செய்திப்பணி கற்றல் மற்றும் செயல்படுத்துதல் மையம். எனவே மறைத்தூதுப்பணி ஞாயிற்றுக்கிழமையில் நம்பிக்கையாளர்கள் அனைவரும் திருச்சபையின் திருப்பணிகளுக்காக தங்களை அர்ப்பணம் செய்ய வேண்டும். பார்வையாளர்களாக அல்ல மாறாக மனஉறுதிப்பாட்டுடனும் பெரும் மகிழ்ச்சியுடனும் நற்செய்தியை அறிவிக்கும் உண்மையான நற்செய்தியாளர்களாக மாறுவோம். நற்செய்தி அறிவிக்காத ஒரு திருச்சபை தோல்வியை தழுவும் என்பதை உணர்ந்த வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் அரிய சிந்தனை நமக்கு வழிகாட்டட்டும். இறைவனடி சேர்ந்த நற்செய்தி பணியாளர்களை நினைவில் கொள்வோம். இன்று நற்செய்திப்பணியில் உதவுபவர்களாக உற்சாகப்படுத்துபவர்களாக பணி ஆர்வத்தினால் நிறைந்து காணப்படுவோம். மறைதூதுப்பணி ஞாயிறன்று நாம் சேகரிக்கும் காணிக்கையை திருஅவை மறைத்தூதுப் பணிகளுக்காக பயன்படுத்த



உரோமை திருப்பீடத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பது நீங்கள் அறிந்ததே. இதற்காக ஆர்வத்துடன் காணிக்கை செலுத்தும்படி உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு அன்று நமது திருச்சபையில் புதிய முயற்சி ஒன்றை தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நமது திருச்சபையில் ஆயர் மாமன்ற நற்செய்தி பணிக்குழுவின் தலைமையில் பயிற்சி பெற்ற பொதுநிலையினர்களுள் இருவர் அக்டோபர் 19, 2025 - நற்செய்தி அறிவிப்பு ஞாயிறன்றும், தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் நம்முடைய பங்குகளை சந்திப்பார்கள். நற்செய்தி அறிவிக்க நாம் பெற்றிருக்கும் அழைப்பு பற்றியும் நமது திருஅவையில் மேற்கொள்ளும் நற்செய்தி பணிகள், இக்கால திருச்சபையின் நற்செய்திப்பணிக்கு அன்றாட வாழ்வில் நாம் வழங்கும் சான்று பொதுநிலையினருக்கு இத்திருப்பணியில் வழங்கப்படும் வாய்ப்புக்கள், திருச்சபையின் நற்செய்திப் பணிகளை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் முதலிய எண்ணங்களை உள்ளடக்கமாகக் கொண்ட 20 அல்லது 25 நிமிடங்களில் நிறைவடைகின்ற பகிர்தல் நடத்துவர். 2015-ம் ஆண்டு முதல் நமது திருச்சபையில் நடந்து வரும் நற்செய்திப் பணி முயற்சிகள் பெரிய எதிர்ப்பார்ப்பை தருகிறது. நற்செய்திப் பணி ஆர்வம், நமது திருஅவையில் உருவாக இது நமக்கு உதவி செய்யும்.

அனைத்து பங்குதந்தையர்களும் திருப்பலிக்குப்பின் கைமுத்து ஆசீர் வழங்குவதற்கு முன் பொதுநிலையினருக்கு நற்செய்திப் பணிகள் குறித்தான பகிர்தல் நடத்துவதற்கான தேவையான ஒழுங்குகளை செய்து கொடுக்க வேண்டும். இறைசமூகத்திற்கு இதனை முன்னரே அறிவித்து அனைவருடைய ஒப்புதலை பெற்றுக் கொள்ள வேண்டும். 2025-ம்

ஆண்டு மிஷன் ஞாயிறு நாளில் நற்செய்தியின் மகிழ்ச்சியாலும், தூய ஆவியின் ஆற்றலாலும் நாம் நிறைவோம். நற்செய்தியாளர்களாக மாற இது நமக்கு உத்வேகம் அளிக்கட்டும். "நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" (1 கொரி 9:16) தூய பவுலின் வார்த்தைகளை, நினைவு கூர்வோம். நமது பங்குகள் நற்செய்திக்கு சான்று பகிரும் இடமாக மாறட்டும். நாமனைவரும் இந்த உலகில் கடவுளின் கருணை மற்றும் அன்பின் கருவிகளாக மாறுவோம். முதல் நற்செய்தியாளராகிய அன்னை மரியா நமது காவல் தந்தையாகிய மார் தோமா, வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை ஆகியோரின் பரிந்துரைக்கு நமது நற்செய்திப் பணியை ஒப்படைப்போம். கடவுளின் கருணையும் ஆசீரும் உங்கள் அனைவர் மேலும் இறங்கி தங்குவதாக. இது இறையன்னையாகிய கன்னிமரியாளுடையவும், திருத்தூதர் குழுமத்தினுடையவும், சிறப்பாக நமது தந்தையாகிய மார் தோமாவின் மன்றாட்டாலும் அமைவதாக. ஆமேன்!

*இவண்,*

ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்
திருஅவையின் உயர் பேராயர் - காதோலிக்கோஸ்

07-10-2025
காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்



# குருத்துவ பயிற்சியகம்

- ❖ மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் அக்டோபர் 4-ஆம் தேதி குருமடத்திற்கு வருகை தந்து, அருட்சகோதரர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்கு அறிவுரைகளையும் ஆன்மிக வழிகாட்டுதல்களையும் வழங்கினார்.
- ❖ எல்லா ஆண்டுகளிலும் போல, அருட்சகோதரர்களுக்கான வருடாந்திர தியானம் இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றது. இத்தியானம் அக்டோபர் 17 முதல் 20-ஆம் தேதி வரை இளம் குருமடத்தில் நடைபெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்கள் ஆழமான ஆன்மிக உணர்வுடன் சிறப்பாக வழிநடத்தினார்.
- ❖ முதலாம் ஆண்டு படிக்கும் அருட்சகோதரர்களுக்கான முதல் பருவத் தேர்வுகள் அக்டோபர் 21 முதல் 29-ஆம் தேதி வரை நடைபெற்றது.
- ❖ **திருத்தொண்டர் பட்ட விழா :**
அக்டோபர் 30-ஆம் தேதி புனித எப்ரேம் இளம் குருமடத்தில், நம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பொற்கரங்களால் அருட்சகோதரர்கள் ஜெப பெனடிட், ஜெர்சன் ஜோர்ஜ், மற்றும் சஜின் செபாஸ்டின் ஆகியோர்க்கு திருத்தொண்டர் பட்டம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் ஏராளமான மறைமாவட்ட குருக்கள், திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவக் கல்லூரியின் அதிபர் தந்தை, பேரருள் தந்தையர்கள், மார்த்தண்டம் மாகாணத் தலைவி மதர் ரோஸ் பிரான்சிஸ் அவர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்களின் பங்கு பிரதிநிதிகள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டு மகிழ்ச்சியுடன் ஜெபித்தார்கள்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### கோல்பிங் தின விழா

கோல்பிங் இந்தியா சார்பாக அடோல்ப் கோல்பிங் அவர்களுக்கு அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டதனை சிறப்பிக்கும் வகையில் ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் 27-ம் நாள் கோல்பிங் தினமாக கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டிற்கான கோல்பிங் தின கொண்டாட்டமானது 18.10.2025 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்கள் கோல்பிங் தின வாழ்த்துரை வழங்கினார்கள். திருமதி ஏஞ்சல் அவர்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டின் தீமைகள் குறித்து கருத்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையுரையாற்றி கோல்பிங் குடும்பங்கள் சமூகத்துக்கும், திருச்சபைக்கும் எடுத்துக்காட்டான குடும்பங்களாக திகழ வேண்டும் என்று பல்வேறு நிகழ்வுகளை எடுத்துக் கூறி வாழ்த்தினார்கள். விழாவில், சிறப்பாக செயல்பட்ட கோல்பிங் குடும்பங்களுக்கு ஆயர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. அதனை தொடர்ந்து செயற்குழு உறுப்பினர் திரு. பால்ராஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற பொதுக்கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. பின்னர் பிளாஸ்டிக் மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மிட்ஸ் நிறுவனத்தில் துவங்கி குழித்துறை HOM நிறுவனம் வரை நடைபெற்ற இந்த பேரணியில் அனைத்து கோல்பிங் குடும்ப உறுப்பினர்களும், மிட்ஸ் பணியாளர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். தொடர்ந்து மதிய உணவுடன் விழா நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 700-க்கும் மேற்பட்ட கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



### மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டம்

சமூக பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் கூடுகை கூட்டமானது 24.10.2025 அன்று 'ஒன்றாக நாங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்' என்ற மைய சிந்தனையோடு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு இறைவணக்கப்பாடலுடன் ஆரம்பமானது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அடிகளார் சமூக பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து தலைமையுரையாற்றினார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு ஷாஜன் ஜோசப் அவர்கள் காப்பீட்டின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்து விழாவினை சிறப்பித்தார்கள். சிறப்பு கருத்துரையாளராக வருகை தந்த நாஞ்சில் நாதம் கலைத்தொடர்பு மையம் கோட்டார் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஞானதாஸ் அடிகளார் அவர்கள் டிஜிட்டல் பாதுகாப்பு என்பதைப்பற்றி சிறப்பு கருத்துக்கள் பகிர்ந்தார். இன்றைய காலகட்டத்தில் தனிப்பட்ட முறையிலும், வங்கி சார்ந்த வகையிலும், விளையாட்டு ரீதியாகவும், விளம்பர வியாபார முறையிலும் மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டிருப்பதையும், அதிலிருந்து விடுபட எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும் என்பது குறித்தும், பல்வேறு நிகழ்வுகளை காணொலி காட்சி வாயிலாக எடுத்துகாட்டி விளக்கினார்கள் தொடர்ந்து, மிட்ஸ் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக இருந்து இறந்த கோல்பிங் குடும்பத்தை சார்ந்த இரண்டுநபர்களின் வாரிசுகளுக்கு தலா ரூ. 12,500 வைத்து ரூ. 25,000 க்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும் இந்த திட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்து வரும் மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் முகவர்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட மஹ்கோடா தேவா செடியானது வழங்கப்பட்டது. பின்னர் ஜெபத்துடன் நிகழ்வானது முடிவுற்றது.

### உதவித்திட்டங்கள்

1. 15.10.2025 அன்று நாகர்கோவில் பணிமண்டலத்தின் 7 சுய உதவி குழுக்களில் உள்ள 28 உறுப்பினர்களுக்கு பல்வேறு செயல்பாடுகளுக்காக ரூபாய் 14,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

2. 29.10.2025 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5,000/- வீதம் ரூபாய் 1,05,000/- வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 25.09.2025 அன்று மிட்ஸ் மற்றும் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் சூரியகோடு பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 55 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

2. 28.09.2025 மற்றும் 29.09.2025 ஆகிய இரண்டு தினங்கள் கொல்லி மலையில் வைத்து நடைபெற்ற DSSS Directors' Gathering and CSR Funding Session கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

3. 28.09.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 98 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.

4. 29.09.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு அருட்சகோதரி சாவியோ அவர்களால் போதை விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகளில் 63 மாணவர்களும் 38 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

5. 01.10.2025 அன்று காலை 10.30 மணிக்கு தளிர்கள் உலகம் திட்டத்தின் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து நடத்தும் ஆஸ்தி அமைப்பின் கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இந்த கூடுகையில் மொத்தம் 49 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

6. 11.10.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு திரு. மைக்கிள் அவர்களால் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளில் 64 மாணவர்களும் 43 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.



7. 26.10.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 124 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.

## HEALTH FOR ONE MILLION (HOM)

### Diocese of Marthandam

- அக்டோபர் 2, 2025 அன்று HOM பெண்கள் சுயஉதவிக் குழு ஆண்டுவிழா மற்றும் அலகு, இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் உண்ணாமலைக்கடை பங்கில் வைத்து நடைபெற்றது. இதில் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார், வேளாண் அலுவலர் திரு. ராஜ்குமார் அவர்கள் கலந்துகொண்டார்கள்.
- அக்டோபர் 10, 2025 அன்று உலக மனநல ஆரோக்கிய தினம் மனநோயாளர்கள் பராமரிப்பு இல்லம் சந்திப்பு DSS காரோடு பங்கில் வைத்து நடைபெற்றது. இதில் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார், MMM உறுப்பினர்கள் அருட்சகோதரி ஐஸ்வர்யா மற்றும் HOM Palliative Care செவிலியர்கள் கலந்துகொண்டார்கள்.
- அக்டோபர் 22, 2025 அன்று படுக்கைநோயாளிகள் நலஉதவி குழித்துறையில் வைத்து வழங்கப்பட்டது.
- அக்டோபர் 29, 2025 அன்று MMM சார்பாக முதியோர்களுக்கு ஊன்றுகோல் DSS காரோடு பங்கில் வைத்து வழங்கப்பட்டது. இதில் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார், MMM உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

மரியாயின் சேனை

## கொமித்சியச் செய்திகள்

### ✦ செபமாலை பவனி

மார்த்தாண்டம் மறைமாவட்ட அளவில் மரியாயின் சேனை சார்பில் நடத்தப்பட்ட செபமாலைப் பவனியானது 26.10.2025 ஞாயிறு மதியம் 2.30 மணிக்கு குழித்துறை மறைமாவட்டத்தைச் சார்ந்த மஞ்சாலுமூடு புனித அந்தோனியார் இலத்தீன் ஆலயத்தில் சேனையின் ஆரம்ப செபத்தோடு ஆரம்பமாயிற்று. கொமித்சிய ஆன்ம இயக்குநர் அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். மஞ்சாலுமூடு புனித அந்தோணியார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை அந்தோணி ஆரோக்கிய சாமி அவர்கள் தொடக்கவுரையாற்றினார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோன் ஜோஸ் பிறைட் அவர்களும் கோட்டாறு ரீஜியா தலைவர் சகோ. யூஜின் அவர்களும் வாழ்த்துரையாற்றினார்கள். தொடர்ந்து செபமாலைப் பவனி நடைபெற்றது. பவனியானது ஜார்ஜ் நகர் (முகவூர்) புனித ஜார்ஜியார் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தை வந்தடைந்தது. மேதகு ஆயர் வின்செென்ட் மார் பவுலோஸ் ஆண்கை அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் அருட்தந்தை றாபின்சன் அவர்கள் நற்கருணை ஆசீர் வழங்கினார்கள். கொமித்சிய தலைவர் சகோ ஏசுராஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். பவனி ஏற்பாடுகளை கொமித்சிய ஆன்ம இயக்குநர் அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத், பனச்சாடு மறைவட்ட முதன்மைகுரு கோர் எப்பிஸ்கோப்பா S. வற்கீஸ் அடிகளார், மறைவட்ட பங்குதந்தையர்கள் மறைவட்ட இறைமக்கள் மற்றும் கொமித்சிய பொறுப்பாளர்கள் இணைந்து செய்திருந்தனர். அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், மரியாயின் சேனையார், இறைமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

### தீயணைப்புப்படை செயல் வழிப்பயிற்சி :

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 25-09-2025 அன்று காலை 10.00 மணியளவில் தீயணைப்பு துறையினர் கல்லூரிக்கு வருகை தந்திருந்தனர். மேலும் கல்லூரி முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் வழிகாட்டுதலில் தீயணைப்புத் துறையினர் செயல்வழிப்பயிற்சியாக வருகின்ற நவம்பர் மாதம் தீபாவளி திருவிழா வருவதனால் தீபாவளியின்போது பட்டாசுகள் வெடிப்பது குறித்தும், அதனால் ஏற்படும் தீ விபத்தின் விளைவுகள் பற்றியும், ஒரு விழிப்புணர்வு பயிற்சி ஆசிரியப் பயிற்சி மாணவர்களுக்கு அளித்தனர்.

### காந்தி ஜெயந்தி :

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 30-09-2025 அன்று காலை 10.30 மணியளவில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பலவிதமான கலைப்போட்டிகள் நடைபெற்றது. எம் கல்லூரியின் தாளாளரும் பேரருட்தந்தையுமான பெர்னாடு அடிகளார் அவர்கள் தலைமையில், அருட்தந்தை ஷிஜு ஜோஸ் அடிகளார் (நிதிக் காப்பாளர்) அவர்கள் முன்னிலையில் கல்லூரி முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் வழிகாட்டுதலில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

### தீபாவளி :

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 17-10-2025 அன்று மதியம் 1.30 மணியளவில் கல்லூரியின்

தாளாளரும் பேரருட்தந்தையுமான பென்னாடு அடிகளார் அவர்கள் தலைமையில், முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் முன்னிலையில் அருட்சகோதரி ஜெனிபா (கண்காணிப்பாளர்) அவர்கள் வழிகாட்டுதலில், தீபாவளியை சிறப்பிக்கும் வண்ணம் பலவிதமான விளையாட்டுகளும், கலைநிகழ்ச்சிகளும் மாணவர்களால் நடத்தப்பட்டது. மேலும் மாலை பட்டாசுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது, அந்த பட்டாசுகளை ஒற்றுமையோடு களிப்புடன் வெடித்து மகிழ்ந்தனர்.

## தாபோர் தியான இல்லம்

✶ நம் தாபோர் தியான இல்லத்தில் எல்லா சனிக்கிழமைகளிலும் தியானம் நடைபெற்று வருகிறது. கவுன்சிலிங் மற்றும் பாவசங்கீர்தனம் வசதி இப்போது செய்து கொடுக்கப்படுகிறது.

✶ முதல் சனிக்கிழமை ஜெபமாலை மாத சிறப்பு தியானம் நடைபெற்றது. அருட்தந்தை ராபின்சன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரை தந்தார். ஆயர் அவர்கள் வருகை தந்து திருவழிபாடு ஆண்டை குறித்து விளக்கினார்.

✶ இரண்டாவது வாரம் மறைதூது பணிக்குழுவின் தலைமையில் தியானம் நடைபெற்றது. அருட்தந்தை ரெஜின் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கினார். நற்கருணை ஆராதனை மறைபரப்புப் பணி குழுவினரால் நடத்தப்பட்டது.



# MCA
## Diocese of Marthandam

❖ 22.10.2025 அன்று மறைமாவட்ட MCA சார்பில் பனச்சமூடு மோரிமக்கள் துறவற இல்லம் சந்தித்து அனைத்து அருட்கன்னியர்களையும் வாழ்த்தி கௌரவித்து பொன்னாடை போர்த்தப்பட்டது.

❖ **துறவிகளை கௌரவித்தல்**
மார்த்தாண்டம் மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் சார்பில் துறவறத்தாரை கௌரவித்தல் செய்யப்பட்டதன் ஒரு பகுதியாக துறவற இல்லங்களில் நேரடியாக சென்று மூத்த மற்றும் நோயால் வாடுகின்றவர்களையும், இதர துறவறத்தாரையும் 09.10.2025 அன்று மார்த்தாண்டம் மோரிமக்கள் மாகண இல்லத்தில் 22 துறவிகளையும், பனச்சமூடு துறவற இல்லத்தில் 12 துறவிகளையும் சந்தித்து அவர்களின் பணிகளை நினைவு கூர்ந்து அவர்களை வாழ்த்தி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் ஆன்மீக இயக்குநர், மறைமாவட்ட தலைவர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 நவம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 14, 15 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை இராபின்சன்
நவம்பர் 01



அருட்தந்தை சதீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை பென்னட்
நவம்பர் 01



அருட்தந்தை அஜீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை வினு குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஹெபின்
நவம்பர் 01



அருட்தந்தை சஜின்
நவம்பர் 01



அருட்தந்தை ஜெனிற்றோ
நவம்பர் 01



அருட்தந்தை சுனீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை அஜீஷ்
நவம்பர் 01



# MCYM
## Youth Apostolate

- ✶ மலங்கரை கத்தோலிக்க திருஅவை அளவிலான MCYM Day Celebration Hesed 2K25 மரியகிரி மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் வைத்து நடைபெற்றது. ஒவ்வொரு மறைமாவட்டத்தை இயக்குநர்கள், அருட்சகோதரி ஊக்குனர்கள், இளையோர்கள் என சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான இளையோர்கள் இந்நிகழ்விலே பங்கேற்றனர். மேதகு ஆயர்களுடைய திருப்பலி மற்றும் நம்வாழ்வு நூலின் ஆசிரியர் அருட்தந்தை ராஜசேகரன் அவர்களுடைய வகுப்பு தொடர்ந்து அருட்தந்தை டார்பெல்லோ கிறிஸ்டஸ் அவர்களுடைய Ice Breaking Session என நிகழ்வுகள் சீரும் சிறப்புமாக 19.10.2025 அன்று நடைபெற்றது. ஒவ்வொரு மறைவட்டங்களும் தயார் செய்த கலை இரவு ஆனது 18.10.2025 அன்று இரவு நடத்தப்பட்டது.
- ✶ மலங்கரை கத்தோலிக்க திருஅவை அளவிலான International Quiz Competition மரியகிரி கல்லூரி வளாகத்தில் வைத்து 18.10.2025 அன்று நடத்தப்பட்டது. மாலை 4.00 மணிக்கு Registration தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்த வினாடி வினா போட்டியை மோண். ஜோஸ் பிறைட் தந்தை அவர்கள் அறிமுக உரையோடு துவங்கி வைத்தார். தொடர்ந்து வெவ்வேறு மறைமாவட்டங்களிலிருந்து வந்த 10 அணிகள் இந்த போட்டியிலே பங்கேற்றனர்.

# மறைவட்ட செய்திகள்

## பனச்சமூடு மறைவட்டம்

❖ பனச்சமூடு மறைவட்ட மறைக்கல்வி கலைப் போட்டிகளானது அக்டோபர் 1-ம் தேதியன்று குளப்பாறை பள்ளிக்கூடத்தில் வைத்து மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

❖ பனச்சமூடு மறைவட்டத்தை சார்ந்த குருக்களின் கூடுகையானது அக்டோபர் 19-ம் தேதியன்று பனச்சமூடு புனித யோசேப்பு மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

## அழகியமண்டபம் மறைவட்டம்

❖ அழகியமண்டபம் மறைவட்ட மறைக்கல்வி கலை விழாவானது அக்டோபர் 2-ம் தேதியன்று செல்லங்கோணம் பள்ளிக்கூடத்தில் வைத்து மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

❖ அழகியமண்டபம் மறைவட்டத்தை சார்ந்த குருக்களின் கூடுகையானது அக்டோபர் 27-ம் தேதியன்று செல்லங்கோணம் புனித ஜார்ஜியார் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.



# ஆயரின் அக்டோபர் மாத நிகழ்வுகள்



2 ➢ கடமலைக்குன்றில் மருத்துவ முகாமினை திறந்து வைத்தார்.

2 ➢ நாகர்கோவிலில் வைத்து நடைபெற்ற அரசு உதவிபெறும் பள்ளிகளின் ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சியுரை வழங்கினார்.

2 ➢ மேல்புறம் புனித காவல் தூதர்கள் ஆலயத்திருவிழாவில் ‘நமது வாழ்வில் தூய காவல் தூதர்கள்’ என்னும் தலைப்பில் மறையுரை வழங்கினார்.

4 ➢ மேரிமக்கள் கன்னியர் சமூகம் மார்த்தாண்டம் மாகணத் தலைவி றோஸ் பிரான்சிஸ் அவர்களின் நாமவிழா திருப்பலியை தலைமையேற்று நாமவிழா நல்வாழ்த்துக்களை பொழித்து ஆசியுரை வழங்கினார்.

5 ➢ ஐக்கிய கிறிஸ்துமஸ் பேரவை செயற்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

9 ➢ பேராயர் பெனடிட் மார் கிரிகோரியோசின் நினைவுநாளை முன்னிட்டு நடைபெற்ற சாந்தி பாதயாத்திரையில் கலந்து கொண்டார்.

10 ➢ பேராயர் பெனடிட் மார் கிரிகோரியோசின் நினைவுத் திருப்பலியில் கலந்து கொண்டு மறையுரை வழங்கினார்.

12 ➢ செம்பகதரிசு ஆலயத்திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.

12 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டார்.

12 ➢ ஐக்கிய கிறிஸ்துமஸ் பேரவை பொதுக்குழு கூட்டத்தை தலைமை தாங்கினார்.

13 ➢ கிறிஸ்தவர் ஐக்கியப் பேரவை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

17 ➢ புஷ்பகிரி புனித குழந்தை தெரசாள் பள்ளி ஆண்டு விழாவில் கலந்து சொண்டு ஆசியுரை வழங்கினார்.

18 ➢ கிடாரக்குழி ஷாலோம் ஹோமில் புதிதாகக் கட்டப்பட்ட அறைகளை திறந்து வைத்து அர்ச்சித்தார்.

18 ➢ Kolping தினவிழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு பேரணியையும் துவங்கி வைத்தார்.

19 ➢ Hesed-Global Youth Day-ல் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றி, ஆசியுரை வழங்கி இளைஞர்களை ஆசீர்வதித்தார்.

19-23 ➢ சிவகங்கை மறைமாவட்ட குருக்களுக்கு ஆண்டு தியானத்தை வழிநடத்தினார்.

24 ➢ காதோலிக்கேட் மையத்தில் திருப்பலி நிறைவேற்றி திருத்தொண்டர்களுக்கு வகுப்பெடுத்தார்.

24 ➢ மார்த்தாண்டம் MJKM பள்ளி ஆண்டு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

25 ➢ திருத்துவபுரம் வட்டார மூத்த குடிமக்கள் சங்கமத்தில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

26 ➢ ஆதிச்சவிளாகம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.

26 ➢ மரியாயின் சேனை சார்பாக நடத்தப்பட்ட செபமாலை பவனியில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

27 ➢ மேக்காமண்டபத்தில் வைத்து நடைபெறற திருமண திருச்சடங்கில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி மணமக்களை ஆசீர்வதித்தார்.

29 ➢ குழித்துறை மார் இவானியோஸ் பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைகளை அர்ச்சித்தார்.

30 ➢ இலவுவிளை இளங்குருமடத்தில் வைத்து மூன்று அருட்சகோதரர் களுக்கு திருத்தெண்டர் பட்டம் வழங்கி ஆசீர்வதித்தார்.



## இம்மாதம் நினைவு கூர


நவம்பர் 2025

1 – அனைத்து புனிதர்களின் நினைவு
2 – கூதோஸ் ஈத்தோ ஞாயிறு (சபையின் புனிதமாக்கம்)
திருவழிபாட்டு ஆண்டு தொடக்கம்
பாசுரமாலையின் சுபஹோ ஒன்றாம் கோலோ இன்று ஆரம்பமாகும்
3 – பவுலோஸ் மார் பீலக்ஸினோஸ் ஆண்டகையின் நினைவு
நிசியா நகரத்து 318 தந்தையர்கள்
7 – மித்தீன் நகரத்து 33 இரத்தசாட்சிகள்
8 – அனைத்து தூதர்கள்
9 – ஹூதோஸ் ஈத்தோ ஞாயிறு
புனித தெயதோர்
10 – இறைவாக்கினர் சாமுவேல், திருத்தந்தை புனித லியோ
12 – அலெக்ஸாந்திரியாவின் மார் யோவான்
13 – புனித தங்கநாவு யோவான்
யுஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் பெயர்விழா
14 – திருத்தூதர் பிப்பு
15 – புனித ஆல்பர்ட்
16 – சக்கரியாவுடனான அறிவிப்பு
திருத்தூதர் மத்தேயு
21 – தூய இறையன்னையின் தேவாலய நுழைவு
22 – மார் பிலமோன், புனித சிசியா
23 – தூய இறை அன்னைக்கு அறிவிப்பு
திருத்தந்தை புனித க்ளெமென்ட், புனித பெலிற்றா
புனே கட்கி தூய எப்ரேம் மறைமாவட்ட உதயம் (2019)
கிறிஸ்து அரசர் திருநாள் (லத்தீன் முறை)
28 – புனித கத்தரீனா
29 – சாறுகியரான மார் யாக்கோபு
30 – தூய இறை அன்னை எலிசபெத்துடன் சந்திப்பு
திருத்தூதர் அந்திரேயா

10

10

23

30


## MCYM




## குருமட செய்திகள்



## MIDS



## HOM Special School



## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர்



## MCA



## மறைவட்ட செய்திகள்

